புரட்டாசி 3 ஆவது சனிக்கிழமை: பெருமாள் கோயில்களில் சிறப்பு வழிபாடு

1. புரட்டாசி மாதம் 3 ஆவது சனிக்கிழமையையொட்டி தருமபுரி மாவட்டம், மணியம்பாடி வெங்கட்ரமண சுவாமி கோயிலில் தங்கக்கவச அலங்காரத்தில் அருள்பாலித்த சுவாமி. 2. பாப்பாரப்பட்டியில் வெள்ளிக்காப்பு அலங்காரத்தில் காட்சியளிக்கும் சஞ்சீவராயன் சுவாமி. 3. போச்சம்பள்ளியை அடுத்த சென்றாயமலை பெருமாள் கோயிலில் சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்த சுவாமி. 4. சிறப்பு அலங்காரத்தில் ஒசூர் கோபசந்திரம் வெங்கடேசப் பெருமாள்.

பென்னாகரம்/ கிருஷ்ணகிரி, அக. 4: பாப்பாரப்பட்டி சஞ்சீவராயன் கோயிலில் புரட்டாசி மாத 3ஆவது சனிக்கிழமையையொட்டி சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்து, தேரை வடம்பிடித்து இழுத்தனர்.

பென்னாகரம் அருகே பாப்பாரப்பட்டியில் பழைமை வாய்ந்த சஞ்சீவராயன் கோயில் உள்ளது. இந்த கோயில் இந்துசமய அறநிலையத் துறையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் புரட்டாசி சனிக்கிழமைகளில் பென்னாகரம், பாப்பாரப்பட்டி, தருமபுரி, பாலக்கோடு மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் இருந்து பக்தர்கள் வந்திருந்து புரட்டாசி விரதத்தை முடித்து சுவாமி தரிசனம் செய்வது வழக்கம்.

இந்த நிலையில் புரட்டாசி 3 ஆவது சனிக்கிழமையையொட்டி கடந்த இருவாரத்தைக் காட்டிலும் கோயிலில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது. சனிக்கிழமை காலை சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்று, மூலவரான சஞ்சீவராய சுவாமி வெள்ளிக் காப்பு அலங்காரத்தில் தங்கக் காசு மாலை அணிவிக்கப்பட்டு சிறப்பு அலங்காரத்தில் காட்சியளித்தார். கோயிலுக்கு வந்திருந்த பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். பின்னர் சஞ்சீவராயன் கோயில் தேரை பக்தர்கள் வடம்பிடித்து இழுத்து, கோயிலை சுற்றிவந்து நேர்த்திக் கடன் செலுத்தினர்.

இதேபோல மலையூர் கோபால்சாமி கோயிலில் புரட்டாசி 3 ஆவது சனிக்கிழமை மூலவரான ஸ்ரீதேவி, பூதேவி சமேத கோபால்சாமிக்கு சிறப்பு அபிஷேகம், பூஜைகள் நடைபெற்றன. தொடர்ந்து விழா குழுவின் சார்பில் 5 ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் பென்னாகரம் சட்டப்பேரவை உறுப்பினர் ஜி.கே.மணி கலந்து கொண்டனர்.

பென்னாகரம் அருகே மடம் பகுதியில் அமைந்துள்ள வெங்கடரமண சுவாமிக்கு புரட்டாசி சனிக்கிழமையையொட்டி சிறப்பு அலங்காரம், ஆராதனைகள் நடைபெற்றன. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

கிருஷ்ணகிரியில்...

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புரட்டாசி 3-ஆவது சனிக்கிழமையையொட்டி, பெருமாள் கோயில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

கிருஷ்ணகிரியை அடுத்த கணவாய்பட்டியில் உள்ள ஸ்ரீ வெங்கட்டரமண சுவாமி கோயில், போச்சம்பள்ளியை அடுத்த சென்றாயமலை பெருமாள் கோயில், ஐகுந்தம் கொத்தப்பள்ளி சீனிவாச பெருமாள் கோயில், கிருஷ்ணகிரி காட்டு ஆஞ்சனேயர் கோயில் வளாகத்தில் உள்ள வெங்கடரமண சுவாமி கோயில், பொன்மலைகுட்டை சீனிவாச பெருமாள் கோயில், பாலேகுளி அனுமந்தராய சுவாமி கோயில் உள்ளிட்ட பல்வேறு பெருமாள் கோயில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. தொடர்ந்து, சிறப்பு அலங்காரத்தில் சுவாமி அருள்பாலித்தார். கோயில்களில் பக்தர்கள் வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

ஒசூரில்...

புரட்டாசி மாத 3 ஆவது சனிக்கிழமையையொட்டி ஒசூர் பெருமாள் கோயில்களில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் அருகே தட்சிண திருப்பதி என்று அழைக்கப்படும் கோபசந்திரம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீதேவி, பூதேவி உடனுறை ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமி கோயில் அமைந்துள்ளது.

இந்த கோயிலில் புரட்டாசி 3-ஆவது சனிக்கிழமையையொட்டி சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

கோயிலில் மூலவர் பெருமாளுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரங்கள் நடைபெற்று, மங்கள ஆரத்தி, தீப ஆரத்திகள் நடைபெற்றன. அதேபோல கோயிலில் தனி சந்திதி கொண்டு அருள்பாலித்துவரும் ஸ்ரீ ஆஞ்சனேய சுவாமிக்கு துளசி மாலை அணிவித்து சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

பின்னர் பக்தர்களுக்கு துளசித் தீர்த்த பிரசாதம் வழங்கப்பட்டு, சடாரி சேவையும் நடைபெற்றது.

இதில் பக்தர்கள் அதிக அளவில் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

அதேபோன்று குடிசெட்லு திம்மராய சுவாமி கோயில், ஒசூர் மலை வெங்கடேசப் பெருமாள் கோயில், கோகுல்நகர் வேணுகோபால் சுவாமி கோயில், கல்யாண வெங்கடேசப் பெருமாள் கோயில், சூளகிரி வரதராஜபெருமாள் கோயில், தேன்கனிக்கோட்டை பேட்டராய சுவாமி கோயில், பேரண்டப்பள்ளி நரசிம்ம சுவாமி கோயில், அதியமான் பொறியியல் கல்லூரியில் உள்ள தன்வந்திரி பகவான் கோயில் உள்பட அனைத்து பெருமாள் கோயில்களிலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. அனைத்து கோயில்களிலும் பக்தர்களுக்கு அன்னதானம், தீர்த்த பிரசாதம் வழங்கப்பட்டது.

ஊத்தங்கரையில்...

ஊத்தங்கரை காந்தி சாலையில் அமைந்துள்ள ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ வேங்கடரமண சுவாமி கோயிலில் புரட்டாசி மூன்றாம் சனிக்கிழமை சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

தொடர்ந்து ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ வேங்கடரமண சுவாமியின் தேர் வீதி உலா நகரின் முக்கிய வீதிகள் வழியாக நடைபெற்றது. இதில் பக்தர்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோயில் அறங்காவலர் குழு தலைவர் ராஜேந்திரன், செயலாளர் ரவி, பொருளாளர் திலீப்சிங், தர்மகர்த்தா பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

தனியார் நிறுவன ஊழியரிடம் ரூ. 8.11 லட்சம் மோசடி

போலீஸார் விசாரணை

கிருஷ்ணகிரி, அக. 4: பகுதிநேர வேலை என்று கூறி, தனியார் நிறுவன ஊழியரிடம் ரூ. 8.11 லட்சம் மோசடி செய்யப்பட்ட சம்பவம் குறித்து இணைய குற்றப்பிரிவு போலீஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையை அடுத்த காடிச்சிப்பள்ளியைச் சேர்ந்தவர் ரமேஷா (38). தனியார் நிறுவன ஊழியரான இவரது கைப்பேசி வாட்ஸ் ஆப் செயலிக்கு தகவல் வந்தது. அதில், பகுதி நேர வேலைக்கு ஊதியம் என்று பிரபல நிறுவனத்தின் பெயரில் போலி முகவரியை மர்மநபர்கள் பதிவு செய்திருந்தனர். மேலும், அந்த நிறுவனத்தில் முதலீடு செய்தால் கூடுதல் வருவாய் கிடைக்கும் என பதிவு செய்திருந்ததை உண்மை என நம்பி, அவர் குறிப்பிட்ட இணையதள முகவரியில் தன் வங்கிக் கணக்கு உள்ளிட்ட விவரங்களை பதிவு செய்துள்ளார்.

அப்போது அவரது வங்கிக் கணக்கிலிருந்து ரூ.8.11 லட்சத்தை மர்ம நபர்கள் திருடினர். இதனால், அதிர்ச்சி அடைந்த அவர், இதுகுறித்து, இணையகுற்றப் பிரிவு போலீஸாரிடம் புகார் அளித்தார். புகாரின் பேரில், போலீஸார் வழக்குப் பதிந்து மோசடியில் ஈடுபட்ட மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.

சர்வதேச ரோபோ ஒலிம்பியாட் போட்டியில் வெற்றிபெற்ற மாணவருக்கு பாராட்டு

சர்வதேச ரோபோ ஒலிம்பியாட் போட்டியில் வெற்றிபெற்ற தருமபுரி செந்தில் பப்ளிக் பள்ளி மாணவர் தரண் ரக்ஷனை பாராட்டி பரிசு வழங்கிய பள்ளித் தலைவர் செந்தில் சி. கந்தசாமி உள்ளிட்ட நிர்வாகிகள்.

தருமபுரி, அக. 4: சர்வதேச ரோபோ ஒலிம்பியாட் போட்டியில் வென்ற தருமபுரி செந்தில் பப்ளிக் பள்ளி மாணவருக்கு பள்ளி நிர்வாகம் சார்பில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

தருமபுரி, அதியமான்கோட்டை செந்தில் பப்ளிக் பள்ளி மாணவர் தரண் ரக்ஷன் ஜே.கே. சர்வதேச ரோபோ ஒலிம்பியாட் போட்டியில் பங்கேற்று ரோபாட்டிக்ஸ் துறையில் தனது தனித்துவமான திறமையை வெளிப்படுத்தினார். அந்த வகையில் அவர் தேசிய அளவில் 37 ஆவது இடத்தையும், சர்வதேச அளவில் 213 ஆவது இடத்தையும் பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளார். இது பள்ளி மாணவர்களின் புதுமை, அர்ப்பணிப்பு மற்றும் திறன்களை எடுத்துக்காட்டுகிறது. தொழில்நுட்பம் மற்றும் ரோபாட்டிக்ஸ் மீதான ஆர்வத்தை வளர்ப்பதற்கான பள்ளியின் உறுதிப்பாட்டையும் பிரதிபலிக்கிறது. மேலும், மற்ற மாணவர்களுக்கும் உத்வேகத்தை ஏற்படுத்துகிறது.

சிறப்பிடம் பெற்ற மாணவர் தரண் ரக்ஷனை செந்தில் கல்வி நிறுவனங்களின் தலைவர் செந்தில் சி.கந்தசாமி, துணைத் தலைவர் கே. மணிமேகலை கந்தசாமி, செயலாளர் கே. தனசேகர், தாளாளர் தீப்தி தனசேகர், நிர்வாக அலுவலர் ஜெ. கார்த்திகேயன், முதன்மை முதல்வர் சி. ஸ்ரீனிவாசன், முதல்வர் பி. செந்தில்முருகன், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினர்.

தீர்த்தமலையில் பலத்த மழை

அரூர், அக. 4: அரூரை அடுத்த தீர்த்தமலையில் வெள்ளிக்கிழமை இரவு பலத்த மழை பெய்தது.

தருமபுரி மாவட்டம், அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி வட்டாரப் பகுதிகளில் வெள்ளிக்கிழமை இரவு 11 மணி முதல் சனிக்கிழமை அதிகாலை வரை பலத்த மழை பெய்தது.

தீர்த்தமலையில் 90.8 மி.மீ, தென்கரைக் கோட்டையில் 76.8, மருதிப்பட்டியில் 21.2, கம்பைநல்லூரில் 18.4, பொம்மிடியில் 17.2, கடத்தூரில் 46, அரூரில் 26.2, பாப்பிரெட்டிப்பட்டியில் 20 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

அரூர், பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் பெய்துள்ள மழையின் காரணமாக சாலையோரம் தாழ்வான பகுதிகளிலும், விவசாய நிலங்களிலும் மழைநீர் தேங்கியுள்ளது. மழையின் காரணமாக புரட்டாசி பட்டத்தில் நெல் நடவுசெய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

மத்தூரில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்

கிருஷ்ணகிரி, அக. 4: மத்தூரில் சனிக்கிழமை நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் நடைபெற்றது.

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை மாவட்ட ஆட்சியர் ச.தினேஷ்குமார், பர்கூர் எம்எல்ஏ தே.மதியழகன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அப்போது, மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது:

மத்தூரில் நடைபெற்ற இந்த முகாமில் 2,212 பேர் பங்கேற்று பயன் பெற்றனர். மேலும், மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

உயர்சிகிச்சை தேவைப்படுவோர் கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தின்கீழ் மருத்துவ சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

தினமணி சந்தா குறித்த விவரம் அறிய புகார்களுக்கு...
தருமபுரி, பாலக்கோடு, அரூர், பொம்மிடி : 84896 34827
85081 38448
கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, ஒசூர், பர்கூர் : 99401 44526
உதவி மைய எண் : 88070 00218

தினமணி
எமது செய்தியாளர்களை தொடர்பு கொள்ள...
தருமபுரி 98409 31459
அரூர் 94436 19137
கிருஷ்ணகிரி 97866 70077
ஊத்தங்கரை 95438 12474
ஒசூர் 9443041404
பென்னாகரம் 90956 56769

NAME CHANGE

I, **SRINIVASAN VARADA UDAYAR,** S/o. Varadhan, born on 20th May 1968, residing at 164/61, Gori Street, Attur Town & Post, Salem -636102, Tamilnadu, shall henceforth be known as **SRINIVASAN VARADHAN**

SRINIVASAN VARADA UDAYAR

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் காட்டன், எண்27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூரு-560095.
கிளை அலுவலகம்: எண்.7/1, பாலமணி காம்ப்ளெக்ஸ், கலைவாணர் தெரு, சத்தி ரோடு, வீரப்பன்சத்திரம், ஈரோடு-638004

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அரையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்தினை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்து "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	02.09.2025 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டீவணித்தொகை (EMD)
1169210090000005 1.Mr.P.குணசேகரன் 2.Mrs.சத்ய ரேகா G	(i) 29.04.2022 & 26.11.2021 அன்றுள்ளபடி ₹ 7,81,271/- (ரூபாய் ஏழு லட்சத்து எண்பத்தொராயிரத்து இருநூற்று எழுபத்து ஒன்று மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் 17.12.2022 & நேரடியான சுவாதீனம் 14.06.2025	₹ 1,06,74,863/- (ரூபாய் ஒரு கோடியே ஆறு லட்சத்து எழுபத்து நான்காயிரத்து எண்ணூற்று அறுபத்து மூன்று மட்டும்)	இடம் எண்.I ₹ 29,03,005/- இடம் எண்.II ₹ 38,86,200/-	இடம் எண்.I ₹ 2,90,300/- இடம் எண்.II ₹ 3,88,620/-

சொத்து விவரம் : இடம் எண்.I: நாமக்கல் பதிவு மாவட்டம், பள்ளிப்பாளையம் சார் பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட பள்ளிப்பாளையம் கிராமம், நாமக்கல் மாவட்டம், மறு சர்வே எண்.14/2A13-ல் P.ஹெக்டேர் 0.06.0, P.ஏக்கர் 0.15 Kist ரூ.0.33, எல்லைகள்: பள்ளிப்பாளையம் - கொக்கராயன்பேட்டை ரோடுக்கு வடக்கு. இடம் (ii) சொத்துக்கு தெற்கு, லட்சுமி மற்றும் மற்றவர்களுக்கு சொந்தமான சொத்துக்கு கிழக்கு, எஸ்வரமூர்த்திக்கு சொந்தமான நிலத்திற்கு மேற்கு. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு திசையில் 32 அடி, கிழக்கு மேற்காக தெற்கு திசையில் 21 அடி, வடக்கு தெற்காக இருதிசையிலும் 70 அடி, **மொத்தம் 1855 சதுர அடி நிலம் மற்றும் அதனுடன் இதர உபகரணங்கள் அதனுடன் வழிப்பாதை உரிமை மற்றும் அனுமந்த உரிமைகள்.**

சொத்து விவரம் : இடம் எண்.II: நாமக்கல் பதிவு மாவட்டம், பள்ளிப்பாளையம் சார் பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட வெஙயரசம்பாளையம் மெயின் ரோடு, பள்ளிப்பாளையம் கிராமம், நாமக்கல் மாவட்டம். நத்தம் மறு சர்வே எண்.278/2, நத்தம் மறு சர்வே எண்.462/13, பழ வார்டு எண்.14, நத்தம் மறு சர்வே எண்.278/2, நத்தம் மறு சர்வே எண்.463/2, பழ வார்டு எண்.14. எல்லைகள்: இடம் (i) சொத்துக்கு வடக்கு, S.F.எண்.14/1 சொத்துக்கு தெற்கு, G.R.பழனிக்கு சொந்தமான சொத்துக்கு கிழக்கு, ராமகௌண்டுக்கு சொந்தமான நிலத்திற்கு மேற்கு. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு திசையில் 19 ½ அடி, கிழக்கு மேற்காக தெற்கு திசையில் 19 அடி, வடக்கு தெற்காக கிழக்கு திசையில் 11 அடி, வடக்கு தெற்காக மேற்கு திசையில் 05 அடி, மொத்தம் 154 சதுர அடி, **ஆகமொத்தம் 2009 சதுர அடி நிலம் மற்றும் அதனுடன் இதர உபகரணங்கள் அதனுடன் வழிப்பாதை உரிமை மற்றும் அனுமந்த உரிமைகள். 2286 ½ சதுர அடி (இடம் எண்.II) வெஙயரசம்பாளையம்.** (a) 0.0073.0 சதுர மீட்டர் சொத்துக்கு எல்லைகள்: பழனியப்பன் மற்றும் முத்துசாமிக்கு சொந்தமான சொத்துக்கு வடக்கு, பஸ்சாயத்து ரோடுக்கு தெற்கு, தமிழ்செல்விக்கு சொந்தமான சொத்துக்கு கிழக்கு, இடம் (b) சொத்துக்கு மேற்கு. **(b) 0.013.5 சதுர மீட்டர் சொத்துக்கு:** குமாரசாமிக்கு சொந்தமான சொத்துக்கு வடக்கு, பஞ்சாயத்து ரோடுக்கு தெற்கு, இடம் (a) சொத்துக்கு கிழக்கு, செம்பண்ணன்-க்கு சொந்தமான சொத்துக்கு மேற்கு. (a, b இடங்கள்) இரண்டின் மொத்த பரப்பு 2286½ **சதுர அடி நிலம் மற்றும்** அனைத்த இதர உபகரணங்கள் அதனுடன் வழிப்பாதை உரிமை மற்றும் அனுமந்த உரிமைகள். அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். வெஙயரசம்பாளையம் சொத்தின் கதவு எண்.32, 33, பாப்பம்பாளையம் சொத்தின் கதவு எண்.1/75.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 14.11.2025 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: 13.11.2025 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் 12.11.2025 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
Mr.ராம்பிரசாத் - 95009 96689 / Mr.டீஜோ ஜாஜன் – 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான M/s.C1 India PVT LTD, மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு Mr. Prabhakaran (Mob: 74182 81709)) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடவும் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். M/s. C1 India PVT LTD, Helpline Number's-7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கவும்.
i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com

தேதி: 05.10.2025
இடம்: பெங்களூரு

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
CUB TRUST AND EXCELLENCE SINCE 1904
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612 001. மின்னஞ்சல் : crmd@cityunionbank.in
போன் : 0435-2432322, ஃபேக்ஸ் : 0435-2431746

அசையும் சொத்துகளுக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 6(1) (b) (c) & (2) மற்றும் விதி 7 ஆகியவற்றின் கீழ் அசையும் சொத்துகளுக்கான விற்பனை அறிவிப்பு. தீவனம் மற்றும் தீவனம் நிலை குறியீடு 2016-ன் r.w.s.52 (1)(2).

இந்த அறிக்கையின் மூலம் பொதுமக்களுக்கு குறிப்பாக சிட்டி யூனியன் வங்கியின் கடன்தாரர்கள்/ஜாமீனதாரர்களாகிய (1) M/s. சரஸ்வதி உத்யோக் இந்தியா லிமிடெட் (In Liquidation), எண்.32, திருநகர் காலனி, ஈரோடு - 638003, மேலும் M/s. சரஸ்வதி உத்யோக் இந்தியா லிமிடெட் (In Liquidation), திடுமல் ரோடு, கபிலர்மலை, பரமத்திவேலூர் தாலுகா, நாமக்கல் - 637204. (2) திரு. B. மோகன், த/பெ. M. பாலுசாமி, எண்.32, திருநகர் காலனி, ஈரோடு - 638003, (3) திரு. R. ராதா, த/பெ. திரு. D.M. ராமலிங்கம், ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பவனம், OA-13, 7வது தெரு, ராஜீவ் நகர், குமரேசபுரம், திருச்செங்கோடு - 637211, (4) திருமதி சாந்தி மோகன், க/பெ. B. மோகன், எண்.32, திருநகர் காலனி, ஈரோடு - 638003, (5) திருமதி கவிதா ஆனந்த், க/பெ. B. ஆனந்தன், எண்.32, திருநகர் காலனி, ஈரோடு - 638003, (6) திரு. B. ஆனந்தன், த/பெ. M. பாலுசாமி, எண்.32, திருநகர் காலனி, ஈரோடு - 638003, (7) திரு. R.R. பிரசாந்த், த/பெ. R. ராதா, ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பவனம், OA-13, 7வது தெரு, ராஜீவ் நகர், குமரேசபுரம், திருச்செங்கோடு - 637211 ஆகியோர் பெற்ற கடன் நிலுவைத் தொகை 22-06-2025 அன்றுள்ளபடி ரூ. 1,32,23,22,341/- (ரூபாய் நூற்று முப்பத்து இரண்டு கோடியே இருபத்து மூன்று லட்சத்து இருபத்து இரண்டாயிரத்து முன்னூற்று நாற்பத்து ஒன்று மட்டும்) மற்றும் 23-06-2025 முதல் பின்வரும் மற்றும் சிட்டி யூனியன் வங்கி லிட்-க்கு சேரவேண்டிய வேறு ஏதேனும் பாக்கிகள், இதர செலவுகள், கட்டணங்கள் ஆகிய மொத்த தொகையை வசூலிக்கும் பொருட்டு மற்றும் 20-08-2023 அன்றுள்ளபடி ரூ. 48,86,62,223.64 (ரூபாய் நாற்பத்து எட்டு கோடியே எண்பத்து ஆறு லட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து இருநூற்று இருபத்து மூன்று மற்றும் பைசா அறுபத்து நான்கு மட்டும்) மற்றும் 21-08-2023 முதல் பின்வரும் மற்றும் கரூர் வைஸ்யா பேங்க் லிட்-க்கு சேரவேண்டிய வேறு ஏதேனும் பாக்கிகள், இதர செலவுகள், கட்டணங்கள் ஆகிய மொத்த தொகையை வசூலிக்கும் பொருட்டு வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ளதும். சொற்தை சிட்டி யூனியன் வங்கி லிட் மற்றும் கரூர் வைஸ்யா பேங்க் லிட் அதிகாரப்பூர்வ அதிகாரியால் நேரடி சொத்து சுவாதீனம் செய்யப்படுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையும் சொத்துகளானது. சிட்டி யூனியன் வங்கி லிட் மற்றும் கரூர் வைஸ்யா பேங்க் லிட் / பரிபாக (Paripassu Charge) ஆகியவற்றின்கீழ் பாதுகாக்கப்பட்ட உடைமையானது "இருக்கின்ற இடத்தில்", "இருக்கின்ற நிலையில்" "இருக்கின்றவற்றுடன்" மற்றும் "மாற்று வழங்கப்பட மாட்டாது" எனும் முறையில் 27-10-2025 அன்று பிற்பகல் 01.00 மணிக்கு விற்பனை செய்யப்பட உள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.18,00,00,000/- (ரூபாய் பதினெட்டு கோடி மட்டும்).
(ஸெட்யூல் : W & Y மற்றும் X க்கானது).

செலுத்தப்பட வேண்டிய பிணை வைப்பு தொகை : ரூ.1,80,00,000/- (ரூபாய் ஒரு கோடியே எண்பது லட்சம் மட்டும்).

மேலே நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு வாங்க விருப்பம் தெரிவித்த ஏலதாரரை ஆங்கர் ஏலதாரராக அறிவித்து. இந்த ஏலமானது "சுவிஸ் சேலஞ் முறையில்" நடத்தப்பட உள்ளது. இந்த நிர்ணயிக்கப்பட்ட ஏல தொகைக்கு மேலே ஏலத்தில் எடுக்க விருப்பமுடைய சவால் ஏலதாரர்கள் தலா ரூ.10,000/- என்று அதிகரிக்கப்பட கூடுதல் தொகையினை விற்பனை ஏல தொகையாக குறிப்பிட்டு ஏலத்தில் பங்கேற்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. ஆங்கர் ஏலதாரருக்கு சவால் ஏலதாரரின் விற்பனை விலைக்கு கோர உரிமை உள்ளது. இருந்து போதிலும் இந்த சவால் ஏலதாரருக்கு மீண்டும் ஏலத்தொகையை உயர்த்திக் கேட்க அனுமதி இல்லை. ஆங்கர் ஏலதாரர் சவால் ஏலதாரரின் விற்பனை விலைக்கு உயர்த்திக் கோர விருப்பம் இல்லாவிடில் அதே விலை கோரப்பட சவால் ஏலதாரரின் ஏல விலைக்கு சொத்தானது விற்பனை செய்யப்படும்.

ஆய்வு நாள் : 24-10-2025 (வேலை நாட்களில் மட்டும்) அன்று முற்பகல் 11 மணி முதல் மாலை 4 மணி வரை.

ஏலத்தில் பங்கேற்பதற்கான விலைப்புள்ளி மற்றும் பிணை வைப்பு தொகையை (EMD) செலுத்துவதற்கான கடைசி நாள்: 27-10-2025 அன்று நண்பகல் 12.00 மணி.

ஏலம் நடைபெறும் இடம் : சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், ஈரோடு கிளை, எண்.907, பன்னீர் செல்வம் பார்க், பிரோ ரோடு, ஈரோடு - 638001.

உயர்த்தி கோரும் தொகை : ரூ.10,00,000/